பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04.12. 2024 7. 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ஒடிஸா மாநிலம் சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.
2. மகாராஷ்டிரா மாநில புதிய முதலமைச்சரை தேர்வு செய்வதற்காக பிஜேபி கூட்டணி கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று மும்பையில் நடைபெறுகிறது.
3. மகளிரின் வளர்ச்சிக்கு அரசு கூடுதல் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்ன பூர்ணாதேவி தெரிவித்துள்ளார்.
4. தென்கொரியாவில் அமல்படுத்தப்பட்ட ராணுவ அவசர நிலைச் சட்டம் திரும்பப்பெறப்படுவதாக அந்நாட்டு அதிபர் திரு யூன் சுக் இயோல் அறிவித்துள்ளார்.
5. ஆசிய ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ஒடிஸா மாநிலத்துக்கு ஐந்து நாள் பயணமாக சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பூரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

உலக புகழ்பெற்ற பூரி ஜெகநாதர் ஆலயத்தில் வழிபாடு செய்யும் அவர், கோபா பந்து ஆயுர்வேத மகா வித்யாலயாவின் 75-வது ஆண்டு கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார்.

பின்னர் இந்திய கடற்படை தின கொண்டாட்டங்களிலும் குடியரசுத்தலைவர் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.

நாளை ஒடிஸா வேளாண் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் 40-வது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று உரையாற்றுகிறார்.

புவனேஸ்வரில் புதிய நீதிமன்ற கட்டிடத்தையும் அவர் திறந்து வைக்கிறார்.

**[]<<<>>>[]**

எந்த ஒரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மற்றும் பருத்தி ஆராய்ச்சி மத்திய நிறுவனத்தின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் பேசிய அவர், உலக நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தி வருவதை சுட்டிக்காட்டினார்.

அந்த வகையில் விவசாயிகள் பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

வங்கி சட்டத்திருத்த மசோதா நேற்று மக்களவையில் நிறைவேறியது.

இந்த மசோதா மீதான விவாதங்களுக்கு பதிலளித்து பேசிய மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வங்கிகளை பாதுகாப்பாகவும், ஸ்திரத்தன்மையுடனும் வைத்திருப்பதே அரசின் நோக்கம் என்று தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் வங்கி சீர்திருத்தங்களின் பயன்களை மக்கள் தற்போது பெற முடிகிறது என்று அவர் கூறினார்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அனைத்தும் லாபகரமாக இயங்கி வருவதாக தெரிவித்த அவர், நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டில் 85 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் லாபம் ஈட்டியிருப்பதாக குறிப்பிட்டார்.

அமைச்சரின் பதிலுரைக்குப் பின் இந்த மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநில புதிய முதலமைச்சரை தேர்வு செய்வதற்காக பிஜேபி தலைமையிலான கூட்டணிக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று மும்பையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் பிஜேபி சார்பில் முதலமைச்சர் பதவிக்கான சட்டமன்ற கட்சித் தலைவர் தேர்வு செய்யப்படவுள்ளார்.

இந்த கூட்டத்தில் பிஜேபி மேலிட பார்வையாளர்களாக மத்திய அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், குஜராத் முன்னாள் முதலமைச்சர் திரு விஜய் ரூபானி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதனிடையே முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டேவை, துணை முதலமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு தேவேந்திர பட்நவிஸ் நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி கூட்டணி 230 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சியை தக்க வைத்தது.

**[]<<<>>>[]**

மகளிரின் வளர்ச்சிக்கு அரசு கூடுதல் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்ன பூர்ணாதேவி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகளிர் தலைமையிலான வளர்ச்சிக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் மகளிரின் பாதுகாப்பு மற்றும் பல்வேறு துறைகளில் அவர்களுக்கான முன்னேற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

2037-ஆம் ஆண்டுக்குள் பெரும்பாலான துறைகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில் அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பிரத்யேக உதவி எண் தொடங்கப்பட்டிருப்பதையும் திருமதி அன்ன பூரணா தேவி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நவீன கால்நடை பராமரிப்பு முறைகளை பின்பற்றுவதற்கு பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக மத்திய கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சகம் தெரிவீத்துள்ளது.

கால்நடை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் மேம்பட்ட இனப்பெருக்க முறைகள், சிறந்த ஊட்டச்சத்து மற்றும் விவசாய தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட நவீன பராமரிப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கால்நடைகளுக்கான தடுப்பூசி போடுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

பி எஸ் எல் வி –சி-59 ராக்கெட் மூலம் ப்ரோபா-மூன்று செயற்கைக்கோள்கள் இன்று மாலை விண்ணில் செலுத்தப்படுகிறது.

ஐரோப்பிய விண்வெளி முகமையின் இந்த செயற்கைக்கோள்கள் ஸ்ரீஹரிகோட்டா சதிஷ் தவான் ஏவுதளத்திலிருந்து மாலை நான்கு மணி எட்டு நிமிடத்திற்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

பூமியிலிருந்து மிகவும் உயரமான சுற்றுவட்டப்பாதையில் இது நிலைநிறுத்தப்பட உள்ளது.

நியூஸ் ஸ்பேஸ் இந்தியா நிறுவனத்தின் மூலம் ஐரோப்பிய விண்வெளி முகமையிடமிருந்து இதற்கான ஒப்பந்தத்தைப் பெற்று வர்த்தக ரீதியாக இஸ்ரோ விண்வெளியில் இந்த செயற்கைக் கோள்களை செலுத்துவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சுற்றுவட்டப் பாதைக்கு சென்றவுடன் இரண்டு செயற்கைக் கோள்களாக பிரிந்து சூரியனின் க்ரோனா மற்றும் அதனை சுற்றியுள்ளப் பகுதியையும்,. சூரியனின் அனல்காற்று குறித்த தகவல்களையும் இந்த செயற்கைகோள்கள் அளிக்கும்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உதகமண்டலம், கொடைக்கானல் உள்ளிட்ட மலைவாசஸ் தலங்களில் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை தடை செய்வது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்யுமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு சதிஷ்குமார், திரு பரத சக்ரவர்த்தி அடங்கிய சிறப்பு அமர்வு, உலக நாடுகளில் பிளாஸ்டிக் பொருட்களை குப்பைத் தொட்டியில் மக்கள் போடுவதாகவும், ஆனால் நம் நாட்டில் பொது இடங்களில் வீசி எறிவதை காணமுடிவதாகவும் வருத்தம் தெரிவித்தனர்.

பேரிடர்களுக்கு இயற்கையை குறை கூற முடியாது என்றும், அவற்றுக்கு நாமே காரணம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி. திருவண்ணாமலை, தருமபுரி, சேலம் மாவட்டங்களில் மாநில அமைச்சர்களும், மீட்புக் குழுவினரும், ஆட்சியர்களுடன் இணைந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஓரிரு தினங்களில் இந்த மாவட்டங்களில் இயல்பு நிலை திரும்பும் என்றும். முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புயல் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தில் ஓரிரு நாட்களில் இயல்பு நிலை திரும்பும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி தெரிவித்துள்ளார்.

அம்மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

**[]<<<>>>[]**

தென்கொரியாவில் அமல்படுத்தப்பட்ட ராணுவ அவசர நிலைச் சட்டம் திரும்பப்பெறப்படுவதாக அந்நாட்டு அதிபர் திரு யூன் சுக் இயோல் அறிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் வடகொரியாவுடன் இணைந்து அரசை முடக்க முயற்சிப்பதாகக் கூறி அந்நாட்டில் அவசர நிலையை அதிபர் கொண்டு வந்தார்.

இதையடுத்து ராணுவ தளபதிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து ஆலோசனை நடத்தியதைத் தொடர்ந்து அவசர நிலை அறிவிப்பை திரும்பப்பெறுவதாக அதிபர் தொலைக்காட்சி வாயிலாக தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சிரியாவில் அலப்போ நகரை கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள் மற்றொரு முக்கிய நகரமான ஹமாவை நோக்கி முன்னேறி வருகின்றனர்.

சிரியாவின் முக்கிய நகரங்களை அரசுப்படையினர் கைப்பற்றுவதற்கு ரஷ்யா உதவியது.

இந்த நிலையில் அலப்போ நகரில் கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் அதிரடி தாக்குதலை நடத்தி தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

இதையடுத்து ஹமா நகரிலும் தாக்குதலை நடத்தும் வகையில் கிளர்ச்சியாளர்கள் நெருங்கி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

[]<<<>>>[]

ஆசிய ஜூனியர் ஹாக்கி போட்டியின் இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மஸ்கட்டில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா, மூன்று – ஒன்று என்ற கோல் கணக்கில் மலேசியாவை வென்றது.

இறுதிப்போட்டியில் இந்தியா – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர்கொள்கிறது.

சார்ஜாவில் இப்போட்டி காலை மணி 10-30-க்கு தொடங்கும்.

இன்றைய ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றால் அரை இறுதிக்கு முன்னேறும்.

[]<<<>>>[]

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் டிங் லிரன் இடையேயான ஏழாவது சுற்று ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

இதுவரை நடைபெற்ற ஆறு சுற்றுகளில் இருவரும் தலா ஒன்றில் வெற்றிபெற்றுள்ளனர்.

மற்ற சுற்றுகள் ட்டிராவில் முடிவடைந்ததால் இருவரும் தலா மூன்று புள்ளி ஐந்து புள்ளிகளுடன் சம நிலையில் உள்ளனர்.

*End of News*